தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.148 /மா/2022**

**நாள் : 06.12.2022**

திரு. V.P. ரவிச்சந்திரன்,
திருப்பூர் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி, திருப்பூர் – எதிர்மனுதாரர்

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம் கதவு எண்.4C–ல் வசிக்கும் திரு. V.P. ரவிச்சந்திரன் என்பவரின் 30.08.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.09.2022-ல் பெறப்பட்டு 148/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர், பாளையக்காடு, ஆகாஷ் இல்லம் கதவு எண்.4C–ல் வசிக்கும் திரு. V.P. ரவிச்சந்திரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

" ந.க. எண்.78/அ1/2020 நாள்.13.05.2020 கடிதத்துடன் 2018–2019 தணிக்கை அறிக்கையை அனுப்பி தணிக்கை தடைகளுக்கு உரிய பதிலை மாமன்ற ஒப்புதலுடன் இரண்டு மாதங்களுக்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று உள்ளாட்சி நிதி தணிக்கை துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்கள். கோப்பு எண்.எச்1/6848/2016 பள்ளி கழிவறை சுத்தம் செய்ய 2018–2019 ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்படாமலேயே தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. இப்பணிக்கு பயன்படுத்தப்பட்ட செலவினத்தின் சரித்தன்மையினையும் தணிக்கையில் உறுதி செய்யவில்லை. மேலும் இந்நிகழ்வில் இழப்புகள் ஏற்பட்டிருப்பின் நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு விபரம் தணிக்கைக்கு அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள். ந.க. எண்.78/அ1/2020 நாள் 13.05.2020 கடிதத்தின்படி 13.07.2020க்குள் மாநகராட்சி ஆணையாளர் அறிக்கை அளித்திருக்க வேண்டும். ஆனால் 22 மாதங்களுக்கு பின்பும்

அறிக்கை அளிக்கவில்லை. துணை இயக்குநர் அவர்களும் கேட்டுப் பெறவில்லை. தணிக்கையில் முறைகேடு நடந்துள்ளது என்பதை உறுதி செய்துள்ளார்கள். இது சட்டங்களுக்கு புறம்பாக குற்றம் செய்பவர்களை பாதுகாத்து மேலும் குற்றம் செய்ய தூண்டும் வண்ணம் உள்ளது. மேலும் தணிக்கை செய்வதின் நோக்கமும் பயனற்றதாகிறது. இணைப்பு எண் இரண்டில் சில வணிக வளாகங்களுக்கு குடியிருப்பு உபயோகத்தில் வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் இழப்பு ரூ.1,62,84,046/– சில சிறப்பு கட்டிடங்களுக்கும் உபயோகத்தில் வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் இழப்பு ரூ.1,80,55,847/– ஏற்பட்டுள்ளதாகவும் இந்த தொகையை வசூல் செய்யவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்கள். இரண்டு ஆண்டுகள் ஆன பின்பும் வசூல் செய்யவில்லை. இப்பொழுதும் வணிக வளாகங்களுக்கு குறைந்த பரப்பளவிற்கும் குடியிருப்பு உபயோகத்திற்கு என்றும் வரிவிதித்து கொண்டு உள்ளார்கள். தணிக்கை செய்து அறிக்கை பெற்றாலும் குற்றம் செய்து கொண்டு உள்ளார்கள். ந.க. எண்.73/அ1/2021 நாள் 06.07.2021 கடிதத்தில் துணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்கள் 2003 ஆம் ஆண்டு முதல் தணிக்கை தடைகள் தீர்வு காணப்படாமல் உள்ளது என தெரிவித்துள்ளார்கள். ஆனால் தீர்வுகான துணை இயக்குநர் அலுவலகத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தணிக்கை தடை தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் மற்றும் துணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை ஆகியோருக்கு மனு எண் மாநகராட்சி 7 நாள் 17.10.2021 மனுவை அனுப்பினேன். 20.10.2021 அன்று மனுக்களை பெற்றுள்ளார்கள். இன்று வரை எந்த பதிலும் அளிக்கவில்லை.

2003ம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை உள்ள தணிக்கை தடைகள் மீது நடவடிக்கை எடுத்து குற்றம் செய்த மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய தண்டனை வழங்குமாறும் நடவடிக்கை எடுத்து தண்டனை வழங்கிய விபரத்தை தெரிவிக்குமாறும் கேட்டிருந்தேன். திரு.க.செல்வகுமார், நிதி ஆலோசகர், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் இருந்து ந.க.எண்.3309/2022/எல்–2 நாள் கடிதம் மூலமாக மாநகராட்சி ஆணையாளர் அவர்களை மனு எண் தணிக்கை 5 நாள் 24.01.2022 மனு மீது நடவடிக்கை எடுத்து விபரத்தினை எனக்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கும் அனுப்ப உத்தரவிட்டுள்ளார்கள். இன்று வரை மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தணிக்கை தடைகள் மீது நடவடிக்கை எடுக்கவும், நடவடிக்கை விபரங்களை எனக்கு தெரிவிக்கவும், உத்தரவிடுமாறு முறைமன்ற நடுவர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி ஆணையர், திருப்பூர் மாநகராட்சிக்கு இம்முறைமன்ற நடுவ 21.09.2022 நாளிட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டது.

3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ 16.11.2022 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் 23.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர்.

4) மனுதாரர் 23.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

" திருப்பூர் மாநகராட்சியில், அங்குள்ள பள்ளி கழிவறையை சுத்தம் செய்ய ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்படாமலேயே தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு

பயன்படுத்தப்பட்ட செலவின் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்யப்படவில்லை. உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் செலவினங்களை தணிக்கை செய்யப்பட்டதில் திருப்பூர் மாநகராட்சியால் 2019 ஆம் ஆண்டிற்கான தணிக்கைத் தடை இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை. பல்வேறு ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தடைகளையும் மாநகராட்சியால் இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை.

சில வணிக வளாகங்களுக்கு வணிகத்திற்கான வரி விதிப்பு செய்யாமல், குடியிருப்பு உபயோகத்திற்கான சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் ரூபாய் 1,62,84,046/– இழப்பு ஏற்பட்டுள்ளது என தணிக்கைத்துறை சுட்டிக்காட்டியுள்ளது.

உதாரணமாக திருப்பூர் ஸ்ரீதங்கம் ஜுவல்லரி அளித்துள்ள துண்டு பிரசுரத்தில் "தென்னிந்தியாவின் மிகப்பெரிய தங்கநகை மாளிகை 25000 சதுர அடியில் நான்கு தளங்கள்" எனவும், மேலும் 1 லட்சம் சதுர அடியில் மல்டி லெவல் கார் பார்க்கிங் வசதி எனவும் மேற்கண்ட நகைக்கடை விளம்பரம் செய்துள்ளது. (இதற்கான விளம்பர பிரசுரத்தின் நகல் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது). ஆனால், அக்கட்டடத்திற்கு முழுவதுமாக வரி விதிக்காமல் சுமார் 56 ஆயிரம் சதுர அடிக்கு மட்டுமே வரி விதித்துள்ளனர். மேற்கண்ட கட்டடம் 4 மாடிக்கு வரைபட அனுமதி பெற்றுவிட்டு, 11 மாடி கட்டடமாக கட்டப்பட்டுள்ளது. அதன் புகைப்படங்களும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட குறைந்த அளவு வரி விதிப்பால் மாநகராட்சிக்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. இத்தகைய இழப்பிற்கு காரணமான அலுவலர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுத்திடவும், தணிக்கைத்துறை சுட்டிக்காட்டியுள்ள கட்டடங்களை முறையாக ஆய்வு செய்து அதற்கான சொத்து வரியை முறையாக விதித்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது 30.08.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5) 23.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் திருப்பூர் மாநகராட்சியின் உதவி ஆணையர்(பொறுப்பு), உதவி ஆணையர்(வருவாய்) ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

" திருப்பூர் மாநகராட்சியில் ஆரம்பக்கல்வி நிதியின் கீழ் பள்ளிகளில் கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த அளவு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனமான Sanitize Technologies என்கின்ற நிறுவனத்திற்கு மாமன்ற தீர்மானம் 158 நாள் 29.11.2017ன்படி ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட பணி மேற்கொள்ளப்பட்ட வகையில் விதி மீறல்களோ அல்லது நிதி இழப்போ மாநகராட்சிக்கு ஏற்படவில்லை என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கும் இது குறித்து மாநகராட்சியால் பதில் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனுதாரர் குறிப்பிட்டவாறு வணிக வளாகங்கள் சிலவற்றிற்கு குடியிருப்புக்கான வரிவிதிப்புகள் விதிக்கப்பட்டிருந்தன. அதில் 32 வரி விதிப்புகளுக்கு குடியிருப்பு பயன்பாடு என

தணிக்கைத்துறையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து, மேற்கண்ட வணிக வளாகங்களுக்கான சொத்து வரி, குடியிருப்பு பயன்பாட்டிலிருந்து, வணிக பயன்பாட்டிற்குரிய சொத்து வரியாக மாநகராட்சியால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தவறு, கணிப்பொறியில் கட்டடங்கள் குறித்த விவரங்களை பதிவு செய்யும்போது ஏற்பட்ட தவறாகும். உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறைக்கும் இது குறித்த பதில் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் திருப்பூர் மாநகராட்சியில் இயங்கி வரும் ஸ்ரீதங்கம் ஜுவல்லரி கட்டடத்தை ஆய்வு செய்து, அங்கு குறைவாக சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தால், அதனை முறையாக மாற்றிடவும், மேலும் மேற்கண்ட கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டிருந்தால், அக்கட்டடத்தின் மீது சட்டப்படியான நடவடிக்கையை உடன் தொடரப்பட்டு அதன் அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறோம்.

மேலும் மாநகராட்சி ஆணையரின் அறிவுரையின்படி, திருப்பூரில் உள்ள அனைத்து கட்டடங்களையும் ஆய்வு செய்து முறையாக வசூல் செய்திட திருப்பூர் மாநகராட்சியில் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக திருப்பூர் மாநகராட்சி ஆணையரால் இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள 18.11.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக வழங்கப்பட்ட சொத்து வரி நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6) திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தனது 18.11.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்ககண்டவாறு தெரிவித்துள்ளார்:

" 2002 ஆம் ஆண்டு நகராட்சிகளில் நடைமுறையில் இருந்த அனைத்து சொத்துவரி விதிப்புகளில் தொகுப்பு விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டபோது அந்தந்த நகராட்சிகளில் அன்றைய நாளில் பெரும்பான்மையான வரிவிதிப்புகள் குடியிருப்பு பயன்பாட்டில் இருந்தவாறு உரிய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் கணினியில் புள்ளி விவரங்கள் பதிவாக்கும் பணி முடித்திட வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி 32 வரி விதிப்புகளும் குடியிருப்பு பயன்பாடு என அங்கீகரிக்கப்பட்டது. இக்குறைபாட்டை தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவுடன் மீண்டும் ஆய்வு செய்து கணினியில் குடியிருப்பு உபயோகமாக இருந்த 32 வரிவிதிப்புகளையும் வணிக பயன்பாடாக மாற்றம் செய்து தற்போது வணிக பயன்பாட்டிற்குரிய தொகையினை வசூல் செய்யப்பட்டு வருகிறது. எனவே, தணிக்கைத் தடையினை நீக்கம் செய்யுமாறு உரிய பதில்களை தயாரித்து அளிக்கப்பட்டது.

மேற்படி தணிக்கை தடைக்கான பதிலுரையில் அளிக்கப்பட்ட வரிவிதிப்பில் குடியிருப்பு பயன்பாட்டிற்கு வணிக பயன்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டதன் வரிவிதிப்புகளின் விபரம் கீழ்வருமாறு:

| வரிசை எண். | புதிய வரி விதிப்பு எண்கள் | தணிக்கையில் குறிப்பிட்ட வரி விதிப்பு எண் | பழைய வரிவிதிதிப்பு எண்கள் | வரி சீராய்வுக்கு முன் அரையாண்டு வரித்தொகை ரூ. | தற்பொழுது வரி சீராய்வின் அடிப்படையில் வணிக பயன்பாடு வரி தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1. | 032/044/901903 | 032/045/01873 | 032/45063705 | 9659/– | 19318/– |
| 2. | 032/044/904363 | 032/045/04333 | 032/45063194 | 9927/– | 19854/– |
| 3. | 032/044/904364 | 032/045/04334 | 032/45063195 | 7446/– | 14892/– |
| 4. | 032/044/904365 | 032/045/04335 | 032/45063196 | 2980/– | 5960/– |
| 5. | 032/044/904373 | 032/045/04343 | 032/45063204 | 6797/– | 13594/– |
| 6. | 032/044/904374 | 032/045/04344 | 032/45063205 | 6797/– | 13594/. |
| 7. | 032/044/904375 | 032/045/04345 | 032/45063206 | 6797/– | 13594/– |
| 8. | 032/044/904377 | 032/045/04347 | 032/45063208 | 6797/– | 13594/– |
| 9. | 032/044/904452 | 032/045/04422 | 032/45063283 | 442/– | 884/– |
| 10. | 032/044/904453 | 032/045/04423 | 032/45063284 | 796/– | 1592/– |
| 11. | 032/044/904454 | 032/045/04424 | 032/45063285 | 2636/– | 5272/– |
| 12. | 032/044/904455 | 032/045/04425 | 032/45063286 | 1757/– | 3514/– |
| 13. | 032/044/904456 | 032/045/04426 | 032/45063287 | 2356/– | 4712/– |
| 14. | 032/044/904436 | 032/045/04406 | 032/45063267 | 6926/– | 13852/– |
| 15. | 032/044/903077 | 032/045/03047 | 032/45063126 | 1105/– | 2210/– |
| 16. | 032/044/904405 | 032/045/04375 | 032/45063236 | 593/– | 1186/– |
| 17. | 032/044/904407 | 032/045/04377 | 032/45063238 | 496/– | 992/– |
| 18. | 032/044/904382 | 032/045/04352 | 032/45063213 | 1490/– | 2980/– |
| 19. | 032/044/904384 | 032/045/04354 | 032/45063215 | 2980/– | 5960/– |
| 20. | 032/044/904450 | 032/045/04420 | 032/45063281 | 251/– | 502/– |
| 21. | 032/044/901957 | 032/045/01927 | 032/45063759 | 13070/– | 26140/– |
| 22. | 032/044/04383 | 032/045/04353 | 032/45063214 | 3535/– | 7070/– |
| 23. | 032/044/904451 | 032/045/04421 | 032/45063282 | 1058/– | 2116/– |
| 24. | 032/044/901872 | 032/045/01842 | 032/45063672 | 8245/– | 16490/– |
| 25. | 032/044/901873 | 032/045/01843 | 032/45063673 | 4519/– | 9038/– |
| 26. | 032/044/901874 | 032/045/01844 | 032/45063674 | 4519/– | 9038/– |
| 27. | 032/044/901875 | 032/045/01845 | 032/45063675 | 4519/– | 9038/– |
| 28. | 032/044/901876 | 032/045/01846 | 032/45063676 | 4519/– | 9038/– |
| 29. | 032/044/901877 | 032/045/01847 | 032/45063677 | 36178/– | 72356/– |
| 30. | 032/045/900187 | 032/044//00188 | 032/44672762 | 85020/– | 170040/– |
| 31. | 032/045/900188 | 032/044/00189 | 032/44072763 | 30126/– | 80252/– |
| 32. | 032/045/900189 | 032/044/00190 | 032/44063764 | 35755/– | 71510/– |

7) முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர்(பொறுப்பு), உதவி ஆணையர்(வருவாய்) மற்றும் திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:

திருப்பூர் மாநகராட்சியில், அங்குள்ள பள்ளி கழிவறையை சுத்தம் செய்ய ஒப்பந்தப்புள்ளி அழைக்கப்படாமலேயே தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் விடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு பயன்படுத்தப்பட்ட செலவின் சரித்தன்மையை தணிக்கையில் உறுதி செய்யப்படவில்லை. உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் செலவினங்களை தணிக்கை செய்யப்பட்டதில் திருப்பூர் மாநகராட்சியால் 2019ஆம் ஆண்டிற்கான தணிக்கைத்தடை இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை. பல்வேறு ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தடைகளையும் மாநகராட்சியால் இதுவரை நிவர்த்தி செய்யப்படவில்லை. திருப்பூர் மாநகராட்சியில் மேலும் சில வணிக வளாகங்கள் அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விட கூடுதல் பரப்பளவில் விதி மீறி கட்டடம் கட்டியும் மாநகராட்சியால் குறைந்தளவு சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது. அதனால் மநாகராட்சிக்கு நிதியிழப்பு எற்பட்டுள்ளதை புகாராக தெரிவித்து உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள கழிவறைகள் சுத்தம் செய்யும் பணி தொடர்பாக திருவாளர் Sanitiz Technologies, கோவை நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் உள்ளூர் சந்தை விலை விகிதப்படி குறைவாக இருந்துள்ளதால் ஒப்பந்தத்தை மாமன்றம் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் அந்நிறுவனத்திற்கு ஓராண்டு காலத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கஜா புயல் உருவாகி மாநிலம் முழுவதும் தொடர் பருவமழை காரணமாக டெல்டா மாவட்டங்களில் கடுமையான வெள்ள சேதம் ஏற்பட்ட பகுதிகளில் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் முழுமையாக ஈடுபட்டு கொண்டிருந்த நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோர நேரம் இல்லாத காரணத்தால் பள்ளி மாணவ/மாணவிகளின் நலன் கருதியும் பொது சுகாதார நலனை கருதியும் அந்த நிறுவனத்திற்கு 30.11.2017ல் பணி உத்தரவு வழங்கியிருந்தாலும் பணியாளர்களை ஒருங்கிணைத்து பணியில் ஈடுபடுத்த கால அவகாசம் தேவைப்பட்டதால் சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரர் தாமதமாக ஜுன் 2018 முதல் பணியினை தொடங்கியுள்ளார். ஒப்பந்த நிபந்தனை பிரிவு 5ன்படி The contract period shall be " one year from the start date" என உள்ளதால் மேற்படி பணியினை 01.12.2018 முதல் 30.04.2019 கல்வி நிதியாண்டு முடியும் வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்ட வகையில் மாநகராட்சியானது விதி மீறல்களோ மற்றும் நிதி இழப்பு ஏதும் இல்லை என தெரிவித்து இப்பொருள் குறித்து எழுப்பப்பட்ட தணிக்கை தடையை நீக்கம் செய்யுமாறு மாநகராட்சி பதில் அளித்துள்ளதை ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. ஒப்பந்தப்புள்ளி குறித்து 3 ஆண்டுகள் கடந்தும் தணிக்கை தடையை நீக்கம் செய்யாதது சந்தேகத்திற்கு இடமளிக்கிறது. இதனை மீண்டும் உள்ளாட்சி தணிக்கைத்துறை தணிக்கை செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

மேலும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் மேற்காணும் கட்டடங்களில் விதி மீறி கட்டிய கூடுதல் பரப்பளவின் அளவீடுகள் திருப்பூர் மாநகராட்சியில் குறைத்து

காட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். உதாரணமாக திருப்பூர் ஸ்ரீதங்கம் ஜுவல்லரி நிறுவனம் அந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட பரப்பளவை விட விதிகளை மீறி முறைகேடாக கட்டப்பட்டுள்ளதை மனுதாரர் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள புகைப்படத்திலிருந்தும் அறிய முடிகிறது.

முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள வணிக கட்டடங்களின் பரப்பளவை நேரடியாக ஆய்வு செய்து கணக்கீடு செய்தாலன்றி சரியான தீர்வு காண இயலாது என்பதால் இது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் ஒரு சிறப்பு குழுவினை அமைத்து அக்குழு மூலம் திருப்பூர் மாநகராட்சியால் அனுமதி அளிக்கப்பட்டுள்ள வணிக வளாகங்களை தல ஆய்வு செய்து, திருப்பூர் மாநகராட்சியால் அனுமதி அளிக்கப்பட்ட உத்தரவில் தெரிவித்துள்ளபடி வணிக வளாக கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளனவா எனவும், அனுமதி அளித்ததைவிட கூடுதல் பரப்பளவில் கட்டடங்கள் கட்டப்பட்டிருந்தால் திருப்பூர் மாநகராட்சியால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தல் வேண்டும். அந்த அறிக்கையின் அடிப்படையில் உரிய மேல் நடவடிக்கை எடுத்திட நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2002ம் ஆண்டு நகராட்சியில் அனைத்து சொத்துவரி விதிப்புகளில் தொகுப்பு விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டபோது 32 மனைப்பிரிவுகளுக்கு குடியிருப்பு பயன்பாடு என அங்கீகரிக்கப்பட்டது என்றும் இக்குறைபாட்டை தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டவுடன் மீண்டும் வணிக பயன்பாடாக மாற்றம் செய்து வணிக பயன்பாட்டிற்குரிய தொகையினை வசூல் செய்யப்பட்டு வருகிறது என்ற செயல் மாநகராட்சி நிர்வாகத்தின் அவல நிலைமையை காட்டுகிறது. ஏறத்தாழ 20 ஆண்டுகளாக வணிக பயன்பாட்டிற்கான தொகையினை வசூல் செய்யாதது மாநகராட்சி நிதி இழப்பு ஏற்பட பணியாளர்கள் உடந்தையாக செயல்பட்டார்கள் என்று மட்டுமே கருத வேண்டியுள்ளது. இதுபோன்று வணிக பயன்பாட்டில் உள்ள எத்தனை கட்டடங்கள் குடியிருப்பு கட்டடடங்களாக மாற்றப்பட்டது என்ற விவரம் குறித்து விரிவான அறிக்கை அனுப்புமாறும் இதற்கு பொறுப்பான அனைவரையும் பொறுப்பாக்கி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் இதற்கு காரணமாக இருந்த அனைத்து அலுவலர்களிடமிருந்தும் தொகையினை பிடித்தம் செய்திடவும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

திருப்பூர் ஸ்ரீதங்கம் ஜுவல்லரி அளித்துள்ள துண்டு பிரசுரங்களில் (pamphlets) 25,000 அடியில் நான்கு தளங்கள் எனவும் 1 லட்சம் சதுர அடியில் கட்டடம் அமைந்துள்ளது என்று விளம்பரம் செய்துள்ளது. மேற்படி ஜுவல்லரி கட்டடத்தை ஆய்வு செய்து குறைவாக சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், அதனை முறையாக மாற்றிடவும் கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டிருந்தால் அக்கட்டத்தின் மீது சட்டப்படியான நடவடிக்கை உடன் தொடரப்படும் என திருப்பூர் மாநகராட்சி உதவி ஆணையர்கள் தெரிவித்திருப்பது ஏற்கக்கூடியது மட்டுமல்ல, மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். மேற்படி உதவி ஆணையர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் ஸ்ரீ தங்கம் ஜுவல்லரி அனுமதி அளித்ததை விட கூடுதல் பரப்பளவில் கட்டடம் கட்டியிருந்தால், உரிய சட்ட ரீதியான நடவடிக்கை தொடர திருப்பூர் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடப்படுகிறது.

1. The sorry state of affairs as could be understood from the records and depositions that prevails in the Tiruppur Corporation is shocking and appalling. Commercial undertakings are charged at residential rates and the error is routinely attributed to mis-feeding in the computer system. This is totally unacceptable, inadmissible and misleading. The loss of revenue for so many years should be made good by retrospective recoveries within 30 days. The computer operator responsible should be sacked forthwith. Severe disciplinary action against all the concerned in this sordid scam should be launched immediately. This mischievous explanation is a cock and bull story put forth before the Local Fund Audit and this Forum. Does the Corporation of Tiruppur presume that facts could be varnished like this and a story could be spun out to hoodwink the system? The CMA is directed to constitute a committee to go into this property tax mess thoroughly and scrutinize all cases to plug the large loopholes that drain the revenue that is due to the Corporation's kitty. The loss of income out of this suppression should be worked out in detail and the quantum should be recovered. The delinquent officials acting like a cabal octopus shall be dealt with deterrently.
2. Similarly the allegation against Sri Thangam Jewellery, should be examined thoroughly by measuring the construction meticulously with reference to the planning permission approval sketch and action as per the Town & Country Planning Act and the Tiruppur Corporation Act as derived from the Coimbatore Corporation Act should be taken within 30 days. No leniency should be shown against such violations and deviations in the actual construction.
3. The Director of Local Fund should ensure that the total loss of revenue by charging residential property tax for commercial entities should be quantified in a complete manner and communicated to the Tiruppur Corporation Commissioner and DMA within 30 days. The alleged delay in furnishing replies to the Audit paras relating to the allegations must be taken to the notice of the DMA and Government in MAWS Dept. for appropriate further action.
4. The Commissioner's report on the petition finds fault with the petitioner as 3rd. party and hence it amounts to interference in the Corporation's administration is perplexing. A citizen who has every right to expect sound administration in the Local Body, especially in tax collections and law abiding system and foolproof revenue inflow into the Corporation's accounts, cannot be alienated in this manner. He has obtained the details under RTI and Local Fund Directorate. The Forum takes exception to such remarks. If the Corporation had taken proactive steps and avoided audit objections like this and sent the replies in time then the petitioner could be labelled as insincere, motivated and presumptuous.

5. A copy of the orders is being sent to Additional Chief Secretary, MAWS for kind information of the Government and directions to the DMA & Corporation of Tiruppur for remedial steps.

2022-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.V.P. ரவிச்சந்திரன்,
4 சி ஆகாஷ் இல்லம்,
பாளையக்காடு,
திருப்பூர் – 641 601.
2. அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச்செயலகம்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009.
3. ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
5. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்